1987 ஏப்ரல் 24]

திரு. எப். எம். இராசரத்தினம் : தலைவரவர்களே, புதிதாக ஆம்னி பஸ்களை ஓட்டுகின்றவர்களுடைய வண்டிகளில் வீடியோ போன்ற சகல வசதிகளையும் அவர்கள் செய்திருப்பதோடு குறைவான கட்டணமும் வசூல் செய்கின்ற காரணத்தால் மக்கள் அதிகமாக அந்த வண்டிகளிலே பயணம் செய்ய விரும்புகிறார்கள். ஆகவே, தொலை தூரத்திலிருந்து வருகிற திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகப் பேருந்துகள், நேசமணி போக்குவரத்துக் கழகப் பேருந்துகள் போன்றவற்றிலும் ஆம்னி பஸ்களில் இருப்பதைப் போன்று வீடியோ போன்ற எல்லா வசதிகளையும் செய்து தர அரசு தகுந்த ஏற்பாடு செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : தலைவரவர்களே, ஒரு வண்டியை ஒரு தனியார் இயக்குகிறபோது ஒரே வண்டியை அவர்கள் முழுமையாகக் கவனிக்கிற வாய்ப்பு இருக்கிறது. அதோடு அந்த வண்டிக்குத் தேவையான ஓட்டுநர், நடத்துநர்களை வைத்திருக்கிறார்களா என்பதுகூட சந்தேகம். அப்படிப்பட்டவர்களோடு ஒப்பிட்டு, அதைப் போன்று திருவள்ளுவர், நேசமணி போக்குவரத்துக் கழக வண்டிகளிலும் வீடியோ போன்ற எல்லா வசதிகளையும் செய்துதருவது நடைமுறையில் பல சிக்கல்களுக்கு காரணமாக அமையும். இருந்தாலும் திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகம் இரண்டு ஆண்டுகளுக்கு ஒரு முறை வண்டிகளை மாற்றி, புதிய புதிய பேருந்துகளை விடுகிறது. பேருந்துகளை இயக்குவதில் தனியார்களோடு போட்டியிடுகின்ற அளவுக்கு இருந்தாலும் சில பேர்கள் பழக்கத்தின் காரணமாக தனியார் பேருந்துகளில் பயணம் செய்கிறார்கள். ஆகையால் நான் ஏற்கெனவே சொன்னமாதிரி, அவைகளைத் தடுக்க அந்தந்த போக்குவரத்துக் கழகமும், அரசும் தீவிரமான நடவடிக்கை எடுத்துக்கொண்டிருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

தமிழ் நாட்டில் தனியார் பஸ்கள்.

484—(*வினா எண். 10831) திரு. ஆர். ரெங்கசாமி : மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ் நாட்டில் தனியார் பஸ்கள் எத்தனை ஓடுகின்றன ?

(ஆ) அவற்றை தேசிய மயமாக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) 5,313.

(ஆ) வழித்தடங்களைத் தேசியமயமாக்கும் விரைவுத் திட்டங்கள் அரசின் பரிசீலனையில் உள்ளன.